RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22249

OPEN ACCESS

# கருவாச்சி காவியம் நாவல் உணர்த்தும் பண்பாட்டுக் கூறுகள்

கே.எஸ் .அன்புகலா [அ, *]

[அ] தமிழ்த்துறை, மார் இவானியோஸ் கல்லூரி (தன்னாட்சி) திருவனந்தபுரம்-695015, தமிழ்நாடு, இந்தியா

# Cultural Aspects of Karuvachi Kaaviyam Novel

K.S. Anbukala [a, *]

[a] Department of Tamil, Mar Ivanios College, Nalanchira, Thiruvananthapuram-695015, Tamil Nadu, India

* Corresponding Author: anbukals@gmail.com

Received: 28-04-2022
Revised: 24-09-2022
Accepted: 07-10-2022
Published: 09-10-2022

Check for updates

**ABSTRACT**

The unique Tamil language has innumerable literary origins. It presents images of life as literature. Internal and external accounts of life form the nucleus of creation. Culture is an inseparable part of human life. Culture is the emotional component of human life. Poet Vairamuthu's Karuvachi Kaaviyam is a realistic portrayal of village life. Mahatma Gandhi's statement "The soul of India lies in the villages" speaks volumes about the importance of village life. This essay explains the cultural aspects of village life through Karuvachi Kaaviyam.

**Keywords:** Karuvachi Kaaviyam, Village, Cultural Aspects Tamil language

## முன்னுரை

வாழ்வியலின் தன்மைகளைப் படியெடுக்கும்போது பண்பாடாக மாறுகின்றது சமூக வாழ்வியலைப் பிரதிபலிக்கின்றது. புதின இலக்கிய வகைதனில் மனிட வாழ்வியலே கதைக்கரு ஆகின்றது. கவிஞர் வைரமுத்துவின் கருவாச்சி காவியம் நாவல் கிராம வாழ்வினூடாகப் பண்பாட்டுக் கூறுகளைப் பதிவு செய்துள்ளது. கிராம வாழ்வு இயற்கைக்கு இயைந்த வாழ்வு இயல்பான வாழ்வு, வாழ்வியலின் பிரிக்கவியலா உறுப்பான பண்பாடு கருவாச்சி காவியத்தின் வாயிலாக அதிகம் உணரப்படுகின்றது. வாழ்வியலின் கூறுகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பண்பாடாகக் கருவாச்சி காவியத்தில் பதிவு செய்யப்படுகிறது. பண்பாடு கூறப்படும் சமூகத்தின் வாழ்வியலின் வரலாறாக மாறும் என்பது கருவாச்சி காவியம் நாவல் வாயிலாகப் புலப்படுகிறது.

## கருவாச்சி காவியம்

கவிஞர் வைரமுத்துவின் கருவாச்சி காவியம் நாவல் கிராமவாழ்வின் தடங்களைச் சிறப்பாகப் பதிவு செய்துள்ளது. 'கருவாச்சி' என்னும் கதைத் தலைவியின் வாழ்வியலைக் கருவாச்சி காவியம் நாவல் சித்தரிக்கின்றது. கிராம வாழ்வின் அனுபவங்களை நன்குணர்ந்தவர் கவிஞர் வைரமுத்து. படைப்புகள் படைப்பின் சிறப்பைப் பெறுவது படைப்பாளி படைப்புகளை உணர்ந்து படைக்கும் போதாகும் கவிஞர் வைரமுத்து கிராம வாழ்வின் எல்லாப் போக்குகளையும் நன்குணர்ந்தவர் என்பதற்குச் சான்றாகக் கருவாச்சி காவியம் நாவல் அமைந்துள்ளது.

கிராமிய வாழ்வினை வாழ்ந்து அனுபவித்து உணர்ந்தவர் கவிஞர் வைரமுத்து. வாழ்ந்த பின்னணியை “விவசாயக் குடும்பம் - மண்ணை நேசிக்கும் மனிதர்கள் - வானம் பார்த்த பூமி இந்திய தேசப் படத்தின் தெற்கைப் போல் இளைத்திருந்த கறவை மாடுகள் - கம்பளியோடு பிறந்த செம்மறியாடுகள் - தேய்ந்த கலப்பை - மருங்கிய மண்வெட்டி - எங்கள் கிராமத்து பெரிசுகளின் மீசை போன்ற அரிவாள் - சோளக் கூழ் - சுட்ட மிளகாய் - தண்டட்டி ஆட ஆட வெற்றிலை எச்சில் துப்பும் காது வளர்ந்த கனங்குழை மாதர்கள் - பழைய நம்பிக்கைகள் - மரபுகள் - அதிகபட்சம் ஐம்பது மைல்களுக்கு மேல் குடும்பத்தில் பயணப் பட்டிராத வாழ்க்கை” என கவிஞர் வைரமுத்துவின் பிறந்து வளர்ந்த கலாச்சாரப் பின்னணியை விளக்குகிறார் சண்முகசுந்தரம் (Shanmugasundaram, 1996). கிராமிய வாழ்வின் தடங்களை நன்குணர்ந்த கவிஞர் வைரமுத்து கிராமிய வாழ்வின் பண்பாட்டுக் கூறுகளைப் படைப்பின் பலமாக மாறியுள்ளது சிறப்புக்குரியது.

## பண்பாடு

முன்னோர்களின் வாழ்வியலில் வேரோடி கிடந்த வாழ்க்கை முறைகளே பண்பாடாக எஞ்சுகின்றது. பண்பாடு என்பது வாழ்வியலின் பிரதிபலிப்பாகும். “சமூகத்தின் உறுப்பினர் என்ற முறையில் மனிதனைப் பற்றிய அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கம், பண்புகள், சட்டம், வழக்கம் போன்ற பல திறமைகளையும், பழக்கவழக்கங்களையும் உள்ள உள்ளடக்கிய முழுமையைப் பண்பாடு என்பர்” என்று பண்பாட்டுக்கு வரையறுக் கூறுகிறார் எஸ்.ஜே பாஸ்கல் கில்பர்ட் Baskal (Gilbert, 1964).

ஒவ்வொரு குழுவிற்கும் ஒவ்வொரு இனத்திற்கும் மாறுபட்ட வாழ்க்கை முறை காணப்படுகின்றது. வாழும் சூழலுக்கு ஏற்ப வாழ்க்கை முறை வகுக்கப்படுகின்றது. இனத்திற்கு இனம் மாறுபாடு அடைவது அவர்தம் வாழ்க்கை முறையைச் சார்ந்தது ஆகும். ”பண்பாடு மக்களின் உணர்வுகளில் பொதிந்து கிடப்பதால் அதனைச் செயல்களின் வெளிப்பாட்டின் வாயிலாக மட்டுமே உணர இயலும். பண்பாட்டின் மிகச் சிறிய அலகு பண்பாட்டுக் கூறு எனப்படும்” என்ற பக்தவச்சல பாரதியின் கூற்று பண்பாட்டின் பிரிவாகப் பண்பாட்டுக் கூறு அமைந்திருப்பதை விளக்குகிறது (Bakthvatchala Bhrathi, 2003).

கருவாச்சி காவியத்தில் கிராம வாழ்வியல் விளக்கப்பட்டுள்ளதால் பண்பாட்டுப் பதிவுகள் மிகுந்துள்ளன. நம்பிக்கைகள், சடங்குகள், உணவு, நாட்டார் வழக்காறுகள் எனப் பண்பாட்டின் பல கூறுகள் கருவாச்சி காவியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## நம்பிக்கைகளும் சடங்குகளும்

காலம் காலமாகப் பின்பற்றி வரும் சடங்குகளே நம்பிக்கையாக எஞ்சுகின்றது.” தன்னுடைய சொந்த குணத்தை ஒரு சமூகம் மாற்றும் போது அல்லது இழக்கும் போது அவற்றுக்கு ஏற்ப முன்பே அமைந்திருந்த நடைமுறைகள் நம்பிக்கைகளாக எஞ்சுகின்றன என்றும்” தமிழவன் நம்பிக்கை என்பதற்கு விளக்கம் தருகின்றார் (Tamilavan, 1997).

கிராம வாழ்வியலில் நம்பிக்கைகள் முக்கியத்துவம் பெறுகின்றது. எல்லா நிகழ்வுகளுக்கும் நல்ல நாளும் நேரமும் பார்க்கும் வழக்கம் நம்மிடையே இன்றும் காணப்படுகிறது. கிராம வாழ்விலும் நாளும் நேரமும் பார்க்கும் முறைமைக் காணப்படுவதைக் கருவாச்சி காவியத்தில் காண இயலுகின்றது.

‘நாளும் கோளும் நாலும் செய்யும்’ ன்னு சும்மாவா சொன்னாங்க. மகப்பேறு காலத்துக்கு போறவ நல்ல நாளு பார்த்து போக வேணாமா? சொல்லுறேன் கேட்டுக்க திங்கக் கெழமை திரும்பாப் பயணம் அன்னைக்குப் போகாத. செவ்வாயோ வெறும் வாயோன்று சொல்லுவாக செவ்வாயும் வேணாம். பொன்னு கெடைச்சாலும் புதன் கெடைக்காதும்பாங்க புதன் கெழமை போ” என்று பிரசவத்திற்கு அழைத்துச் செல்லும் போது நல்ல நாள் பார்த்து செல்லுதல் வேண்டும் என்ற நம்பிக்கையைப் பதிவு செய்துள்ளார் கவிஞர் வைரமுத்து (Vairamuthu, 2006).

இனக்குழுவிற்கு ஏற்ப சடங்குகள் மாறுபடுகின்றது. சடங்குகள் நம்பிக்கையுடன் இணைந்து பல வகைதனில் பின்பற்றப்படுகிறது. பிறப்பு முதல் இறப்பு வரை மனிதன் வாழ்நாளில் பல சடங்குகளுக்கு உட்படுத்தப்படுகிறான். இன்பமும் துன்பமும் கலந்த வாழ்வியலில்அனைத்து நிகழ்வுகளுக்கும் சடங்குகள் அவசியமும் அத்தியாவசியமும் ஆகின்றது. வாழ்வியலோடு இயைந்த இறப்பு சடங்குதனைக் கருவாச்சி காவியம் பதிவு செய்துள்ளது. கருவாச்சியின் தாய் பெரிய மூக்கி இறந்தபோது சுடுகாட்டிற்குக் கொண்டு சென்று நடக்கும் சடங்குதனை "பாடையைத் தூக்கி அதே மாதிரி மூணு சுத்து எதிர்திசையிலச் சுத்தி மந்தையிலிருந்து சுடுகாட்டுப் பாதையில் கூடிட்டாக எல்லோரும் கொட்டுக்காரன் முன்னுக்குக் கொட்டடிடுச்சுப் போக மாட்டு செவ்வந்தியையும் அரளிப்பூவையும் பூக்காரன் ரெண்டு பக்கம் பிச்சு ஒதறி வர - கடுகும் பொரியும் அள்ளி தெளிச்சிட்டே தோட்டி பின்னுக்கு தொடர்ந்து வர - பெரிய பெரிய மூக்கி பொணம் கடைசி காடு தேடி" என்று சுடுகாட்டிற்குக் கொண்டு செல்லும் சடங்கு முறையைப் பதிவு செய்துள்ளார் கவிஞர் வைரமுத்து. இவ்வாறு சடங்குகளும் நம்பிக்கைகளும் கிராம வாழ்வின் பகுதியாக உள்ளதைப் பதிவு செய்துள்ளார் (Vairamuthu, 2006).

## உணவு

கிராமிய வாழ்வில் உணவும் உடையும் தேவைக்குப் பயன்படுத்தப்படும் பண்பினைக் கொண்டிருப்பதைக் காண இயலுகின்றது. ஆடம்பரம் இல்லாத வாழ்வியலில் உணவும் உடையும் அத்தியாவசியம் என்ற நோக்கில் மட்டுமே கிராம வாழ்வில் காணப்படுகிறது. 'உணவு பழக்கவழக்கங்கள் ஒரு சமூகம் வாழும் பருவச்சூழலை வாழ்நிலத்தின் விளைபொருள்கள் சமூகபடி நிலைகள், உற்பத்தி முறை, பொருளாதார நிலை ஆகியவற்றைப் பொறுத்து அமையும்" என்று சமூகத்தில் உணவு பழக்கம் தோன்றிய முறையை விளக்கியுள்ளார் தொ.பரமசிவன் (Paramasivan, 2008).

கிராம வாழ்வில் உழவுத் தொழிலே முக்கியத்துவம் பெறுகின்றது உழைக்கும் உழைப்பிற்கு ஏற்ப உணவு முறை பண்பாட்டைக் கிராம வாழ்வில் காண முடியும். சுவைக்காக உணவைப் பயன்படுத்தாது பசிக்காக உணவை உண்ணும் முறை காணப்படுகிறது. சங்க காலத்தில் உழவு தொழில் புரிவோர் பழஞ் சோற்றை உண்டனர் என்பதைப் புறநானூறு பாடல் விளக்குகிறது.

"மென்புலத்து வயலுழவர்
வன்புலத்துப் பகடுவிட்டுக்
குறுமுயலின் குழைச் சூட்டொடு
நெடுவாளை பல்லுவியற்
பழஞ்சோற்றுப் புகவருந்தி"

என்னும் பாடல் தெரிவிக்கிறது (Duraiswami pillai, 1951). கிராம வாழ்வில் அரிசிச் சாப்பாடு என்பது அரிதான காரியம். ஆனால் அரிசிச் சாப்பாடு கிராம வாழ்வில் சிறப்பிடம் பெறுகின்றன.

"அங்க பச்ச நெல்ல ஒரல்ல போட்டு குத்தி எடுத்தா கருவாச்சி, அதை சோறாக்கி கொழஞ்சும் கொழையாம இறக்கி உருண்டை பிடித்து புளிச்ச தண்ணில போட்டு" என்று கிராமிய உணவு முறையைப் பதிவுசெய்துள்ளார் (Vairamuthu, 2006). உணவு என்பது பசி போக்கும் கருவி. உழைக்கும் வர்க்கத்தினர் உணவை ஆரோக்கியத்தின் வாயிலாகக் கருதுகின்றனர். எனவே உடலைப் பேணும் உணவுகளை உட்கொண்டனர்.

## நாட்டுப்புற வழக்காறுகள்

கிராமிய வாழ்வில் நாட்டுப்புற வழக்காறுகள் முக்கியத்துவம் பெறுகின்றது. பழமொழிகள், விடுகதைகள், நாட்டுப்புற பாடல்கள் என நாட்டுப்புற வழக்காறுகள் கருவாச்சி காவியத்தில் இடம் பெறுகின்றன.

பழமொழிகள் பழமையும் இனிமையும் நிறைந்தவை. சுருக்கமான சொற்களில் திரும்பத்திரும்ப பழமொழிகள் பயன்படுத்தப்படுவதால் சுவை ஏற்படுகின்றது. பொய்யான உறவு பூண்டு அன்பு காட்டுவதை,

"சோழியன் குடுமி சும்மா ஆடுமா" என்னும் பழமொழி பயன்படுத்தபடுகிறது (Vairamuthu, 2006).

விடுகதை என்பது விடுவிக்கப்பட வேண்டிய கதை. நாவலுக்குச் சுவையூட்ட நாட்டுப்புற வழக்காறுகள் கையாளப்படுகின்றது. கருவாச்சி காவியத்தில் பின்வரும் விடுகதை கையாளப்படுகிறது.

"பொட்டு வைக்காத சாமி ஒரு சாமி

பொச்சு கழுவாத சாமி ஒரு சாமி

ஒட்டுத்துணி கட்டாத சாமி ஒரு சாமி

மொத்தம் மூணு சாமி என்ன சாமி"

என்று கதையோட்டத்தினிடையே கவிஞன் வைரமுத்து விடுகதையைப் பயன்படுத்துகிறார்.

கதாபாத்திரங்களின் இன்பதுன்ப உணர்வுகளைப் பிரதிபலிக்கும் கருவியாக நாட்டுப்புறப்பாடல்கள் திகழ்கின்றன. கருவாச்சியின் ஆடு கொல்லப்பட்ட போது மகனாகக் கருதி வளர்த்த ஆட்டினை எண்ணி பின்வரும் ஒப்பாரியைப் பாடுகிறாள் கருவாச்சி.

"பெத்தெடுத்து நான் வளர்த்த

பெரியமகன் மண்ணுத் தள்ளு

தத்தெடுத்த நான் வளர்த்த

தங்கமகன் காங்கலையே!"

மொழியின் பல்வேறுக் கூறுகளிலும் பழமொழியும், விடுகதையும், பாடல்களும் அமைந்திருப்பதை அறிய இயலுகிறது. பண்பாட்டின் கூறுகளான நாட்டுப்புற வழக்காறுகள் கிராமத்தின் அடையாளங்களும் சின்னங்களும் ஆகும். கருவாச்சி காவியத்தில் நாட்டுப்புற வழக்காறுகளை நாவலுக்குச் சுவையூட்டும் வகையில் பயன்படுத்தியுள்ளார் கவிஞர் வைரமுத்து (Vairamuthu, 2006).

## ஆய்வு பயன்கள்

தமிழ்மொழியின் தனிச்சிறப்பு காலத்தை மிஞ்சி வளர்ச்சியடைவது ஆகும். கிராமிய வாழ்வின் சுவடுகளைக் கருவாச்சி காவியம் எடுத்தியம்புகிறது. கவிஞர் வைரமுத்து கிராம வாழ்வின் பின்னணியை உடையதால் கிராம வாழ்வியல் இயல்பாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. வாழ்வியலின் நீட்சியாகப் பண்பாடு காணப்படுகிறது. நம்பிக்கைகளும் சடங்குகளும் வாழ்வியலின் பகுதியாகக் காணப்படுகிறன. உயிர்வாழ, உடல் பேண உதவும் பொருளாக உணவு கிராம வாழ்வில் பயன்படுத்தப்படுகிறது. கிராம வாழ்வின் பண்பாட்டைப் பிரதிபலிப்பவையே நாட்டுப்புற வழக்காறுகள். பழமொழி, விடுகதை, நாட்டுப்புற பாடல் என்பன வாழ்வின் உணர்வுகளை விளக்கும் கருவி ஆகின்றது.

## முடிவுரை

காலத்தை வென்று வாழும் தமிழ்மொழி எண்ணற்ற இலக்கியக் கூறுகளைக் கொண்டுள்ளது. கருவாச்சி என்ற பெண்ணிற்கு வடிக்கப்பட்ட காவியமே கருவாச்சி காவியம். பண்பாடு என்பது வாழ்வியலின் பிரதிபலிப்பாகின்றது. வாழ்வின் கூறுகளான நம்பிக்கைகளும் சடங்குகளும் வாழ்வியலில் நீட்சி பெறுகின்றது. உணவு வாழ்வியலின் அடிப்படை தேவையாகின்றது. நாட்டுப்புற வழக்காறுகள் வாழ்வியலின் உணர்வுகளை வெளிக்கொணரும் கருவி ஆகின்றது. கருவாச்சி காவியம் நாவலில் பண்பாட்டுக் கூறுகள் கிராமிய மணத்துடன் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## References

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License